1973 மார்ச் 30]

*Properties of Srisalai Mariamman Temple*

* 308 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that the properties of Srisalai Mariamman Temple, Thuraiyur Taluk, Tiruchirappalli District have been encroached upon by others; and

(b) if so, the action taken thereon by the Government?

ஸ்ரீசாலை மாரியம்மன் கோவிலின் சொத்துக்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஸ்ரீசாலை மாரியம்மன் கோவிலின் சொத்துக்கள் மற்றவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவிடப் பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*Renovation Committee for the Temple at Avudaiyar Koil, Thanjavur District*

* 309 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any Renovation Committee has been constituted for the Temple at Avudaiyar Koil, Thanjavur District;

(b) if so, when the renovation work was commenced ;

(c) when the renovation work will be completed ;

(d) whether the Government of Tamil Nadu have sanctioned any financial assistance for the renovation work; and

(e) if so, the amount?

[1973 மார்ச் 30

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில் ஆலய திருப்பணிக் குழு.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம், ஆவுடையார் கோயில், திருக் கோயிலுக்காக திருப்பணிக்குழு ஏதேனும் அமைக்கப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், திருப்பணி எப்பொழுது தொடங்கப் பெற்றது?

(உ) திருப்பணி எப்பொழுது முடியும்?

(எ) திருப்பணிக்குத் தமிழக அரசு ஏதேனும் நிதி வழங்கி யுள்ளதா?

(ஐ) ஆமெனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது.

(உ) உத்தேசமாக இரண்டாண்டுகளாகும்.

(எ) இல்லை.

(ஐ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய் செலவிலே இந்தத் திருப்பணி நடப்பதாக இருக்கிறது? எந்த ஆண்டுக்குள்ளாக முடிவுறவேண்டுமென்று அரசு ஏதாவது நினைத் துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த வேலைகளுடைய மொத்த மதிப்பீடு 5 லட்சத்து 6 ஆயிரத்து 710 ரூபாயாகும். 1973-ஆம் ஆண்டு முடிவிற்குள் இந்த வேலைகளை முடிக்க வேண்டு மென்ற உத்தேசத்தில் இந்தத் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வேலைகளை முடித்திருக்கிறார்கள். மேற்கொண்டு

1973 மார்ச் 30]

இந்த வேலையைத் தொடர்ந்து விரைவாக நடத்த வேறு பல கோவில் களிலிருந்து உபரி நிதியை மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஆவுடையார் கோவில் தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்த கோவிலாகும். இப்படிப் போய்க்கொண்டிருக்கிற போக்கைப் பார்த்தால், அது விரைவாக முடிவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அதை 1973-ஆம் ஆண்டுக்குள் நடத்தி முடிப்பதற்குரிய காரியங்களை அரசு விரைந்து செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது முடிந்துள்ள வேலையைப் பார்ப்போமானால், 1973-ஆம் ஆண்டுக்குள் நம்மாலே முடிக்க முடியாது. ஆனால் இன்னும் கொஞ்ச நாட்களில் முடிப்பதற்குத் தேவையான பண வசதியில்லாத காரணத்தினால், வேலைகள் மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே தேவையான பணத்தை பழனிக் கோவிலிலிருந்தும், வேறு சில கோவில்களிலிருந்தும் ஆணையருடைய பொது நல நிதியிலிருந்தும் மாற்றித் தந்து விரைவில் இந்த வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*Hindu Religious and Charitable Endowments (Administration) Department of Tamil Nadu*

* 310 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received any representation that the administration of the Hindu Religious and Charitable Endowments Department should be vested in an autonomous body; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறை

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—